## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.550/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW -10 /PW-2 |
| Name | : Tr. Jayakumar |
| Father/Husband's Name | : R. Thirumani |
| Village | : Inspector of Police |
| Taluk | : Chengalpattu Town P.S. |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2026.

A1 died. A2 to A4 accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளான உதவி ஆய்வாளர் சிவகுமார் மற்றும் ஆய்வாளர் விநாயகம் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவரின் கையொப்பம் எனக்கு நன்கு பரீட்சையம். ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் நான் சாட்சி அளிக்கிறேன். கடந்த 27.03.2021 ம் தேதி மதியம் 14.00 மணி அளவில் உதவி ஆய்வாளர் சிவகுமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது மாயகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று குற்ற எண். 147/2021 ச/பி. 341, 294(பி), 384, 506(2) இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **மாயகிருஷ்ணன் அளித்த புகார் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முதல் தகவல் அறிக்கை அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் உதவி ஆய்வாளர் சிவகுமார் அவர்கள் சம்பவ இடமான குண்டூர் பிஎஸ்என்எல் அலுவலகம் அருகே சென்று சாட்சிகள் செல்வராஜ் மற்றும் பிரபுவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும்

பார்வை மகசர் ஆகியவற்றை தயார் செய்துள்ளார். **அந்தப் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அதசாஆ 3 மற்றும் அதசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புலன் விசாரணையின் போது எதிரிகள் முருகன் மற்றும் யுவராஜ் ஆகியோரை உதவி ஆய்வாளர் சிவக்குமார் அவர்கள் செங்கல்பட்டு மலை பூங்கா அருகே கைது செய்து எதிரி முருகன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் சுரேஷ் மற்றும் கோபால் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கானது பின்னிட்டு ஆய்வாளர் விநாயகம் என்பவரால் புலன்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 30.03.2021 ம் தேதியில் ஆய்வாளர் விநாயகம் மீதமுள்ள இரண்டு எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் இவ் வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் 2 முதல் 4 தரப்பு குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கில் புகார்தாரர் எந்த ஒரு புகார் கொடுக்கவில்லை என்றாலும் இவ்வழக்கு புகாரானது காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் தவறு. எதிரிகளுக்கு புகார்தாரரை யார் என்று தெரியாது என்று சொன்னால் தவறு அவர்களுக்கு தெரியும். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்க்கும் தொடர்பில்லை உயர் அதிகாரிகள் அறிவுத்தலின் பேரில் எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு. அப்பு கார்த்திக் என்கிற எதிரிக்கு இதற்கு முன் வழக்குகள் இருந்ததால் இவ்வழக்கு அவர் மீது பொய்யாக போடப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.